بِسْمِ اللَّهِ الرَّحْمَنِ الرَّحِيمِ

**வியக்கட்டும் விழுப்புரம்!** **விழிக்கட்டும் சமுதாயம்!**

# மனிதகுல வழிகாட்டி
# திருக்குர்ஆன்
# மாநில மாநாடு ஏன்?

அன்புடையீர், அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி...

இன்ஷாஅல்லாஹ் வருகின்ற ஜனவரி 27, 2019 அன்று விழுப்புரத்தில் மனிதகுல வழிகாட்டி திருக்குர்ஆன் மாநாடு மாநிலம் தழுவிய அளவில் நடைபெற உள்ளது.

தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் இம்மாநாட்டை கீழ்க்காணும் நோக்கங்களுக்காக நடத்த முடிவு செய்திருக்கின்றது.

1. முஸ்லிம் சமுதாய மக்கள் திருக்குர்ஆன் கூறுகின்ற "அல்லாஹ்வை மட்டுமே வணங்க வேண்டும்" என்ற ஏகத்துவக் கொள்கைக்கு மாற்றமாக நடந்து கொண்டிருக்கின்றனர். இது அவர்களை நிரந்தர நரகத்திற்குக் கொண்டு போய் சேர்த்து விடும். எனவே, அவர்களை சுவனத்திற்கு அழைத்துச் செல்கின்ற, குர்ஆன் கூறுகின்ற உண்மையான ஏகத்துவக் கொள்கையின் பக்கம் அழைத்தல்.

2. இறைவனால் அனுப்பப்பட்ட இறுதித் தூதரான முஹம்மது (ஸல்) அவர்களை மட்டுமே முஸ்லிம்கள் பின்பற்ற வேண்டும் என்று திருக்குர்ஆன் கட்டளையிடுகின்றது. ஆனால் அதற்கு நேர்மாற்றமாக மக்கள் தங்கள் வாழ்வியல், வணக்கவியலில் பல்வேறு இமாம்களை மத்ஹபுகளின் பெயரால் பின்பற்றுகின்றனர்.
   இது போன்ற மத்ஹபுகள், தனிமனித வழிபாடுகளை விட்டும் மக்களை மீட்டு, முஹம்மது (ஸல்) அவர்களை மட்டும் பின்பற்ற அழைப்பு விடுத்தல்.

3. முஸ்லிமல்லாத மக்கள் மறுமை உலகம் பற்றிய நம்பிக்கையில்லாமல் வாழ்கின்றனர். மறுமையை நம்பிய முஸ்லிம்களும் பல்வேறு வகையிலும் குர்ஆனுக்கு மாற்றமான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

   இவ்வுலகில் செய்த நன்மை, தீமைகளுக்கான கூலியை இறைவன் மறுமை உலகில் கொடுப்பான் என்ற எச்சரிக்கையை முஸ்லிம்கள் மற்றும் முஸ்லிம் அல்லாதோருக்கு பகிரங்கமாக எடுத்துச் சொல்லுதல்.

4. குர்ஆன் ஓதத் தெரியாத முஸ்லிம்களுக்கு குர்ஆன் ஓதக் கற்றுக் கொடுத்தல்.

5. ஓதத் தெரிந்தவர்களை, திருக்குர்ஆனின் சில அத்தியாயங்களையேனும் மனனம் செய்ய வைத்தல்.

6. ஓதத் தெரிந்தவர் மற்றும் மனனம் செய்தவர்களை, அன்றாடம் ஒரு பக்கமாவது திருக்குர்ஆன் தமிழாக்கத்தைப் படிக்கத் தூண்டுதல்.

7. மது, சூது, விபச்சாரம் ஆகிய சமூகத் தீமைகளை ஒழித்திட திருக்குர்ஆன் மட்டுமே ஒரே தீர்வு என்று முஸ்லிம்கள், பிற சமுதாயத்தவர்களுக்கு உணர்த்துவதற்காக அமைதிப் பேரணி, மனிதச் சங்கிலி, பொதுக்கூட்டம், தெருமுனைப் பிரச்சாரம் போன்ற நிகழ்ச்சிகளை நடத்துதல். கடந்த சில மாதங்களாக பல மாவட்டங்கள் இந்தத் திட்டத்தை செயல்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

8. பிற சமுதாய மக்களைச் சந்தித்து திருக்குர்ஆன் தமிழாக்கம் வழங்குதல். அந்த அடிப்படையில் மாவட்டங்கள் தோறும் பிறமத சகோதரர்களுக்கு இதுவரை சுமார் 10,000 தர்ஜுமாக்களுக்கு மேல் வழங்கப்பட்டிருக்கின்றன.

9. தலாக் சட்ட மசோதா மூலம் மத்திய அரசு முஸ்லிம்களின் தனியார் சட்டத்தில் தலையிட்டிருக்கின்றது. மத்திய அரசின் இந்த தலையீட்டைக் கண்டிப்பதுடன், ஷரீஅத் சட்டத்தில் கை வைப்பதை இந்தச் சமுதாயம் ஒருபோதும் சகித்துக் கொள்ளாது என்பதைப் பல லட்சம் முஸ்லிம்கள் இம்மாநாட்டில் ஒன்று திரண்டு மத்திய, மாநில அரசுகளுக்கு உரத்துச் சொல்லுதல்.

10. இன்று இந்தியாவில் கொலை, கொள்ளை, கற்பழிப்புகள் சர்வசாதாரணமாக நடந்துக் கொண்டிருக்கின்றன. 2012 ல் டெல்லியில் ஓடும் பஸ்ஸில் நடந்த நிர்பயா கற்பழிப்பும் அதன் விளைவாக ஏற்பட்ட மரணமும் நாட்டை மட்டுமல்ல நாட்டில் வாழ்கின்ற ஒவ்வொருவரின் உள்ளத்தையும் உலுக்கியது. நாடே கொந்தளித்து கொதித்தெழுந்தது. இதன் பின்னர். கற்பழிப்புக்கு 7 வருடத்திலிருந்து 10 வரை சிறைத் தண்டனை என்றும் அதிகப்பட்சமாக ஆயுள் தண்டனை என்றும் குற்றவியல் சட்ட திருத்தம் கொண்டு வரப்பட்டது. ஆனால் இது குற்றவாளிகளிடம் எந்த மாற்றத்தையும் கொண்டு வரவில்லை. அதன்பின்னர் தான் சென்னை அயனாவரத்தில் சிறுமியிடம் மிருகத்தனமான கூட்டு பலாத்காரம் நடந்துள்ளது. இது போன்று பல்வேறு பாலியல் குற்றங்கள் அதனை தொடர்ந்து படுகொலைகள்தொடர்ந்து நடந்துக் கொண்டிருக்கின்றன.. இம்மாதிரியான கட்டங்களில் மக்களிடமிருந்து கற்பழிப்புகளுக்கு எதிராக அரபு நாட்டு சட்டம் வேண்டும் என்ற குரல்கள் எழுகின்றன. அவர்கள் கேட்பது அரபு நாட்டு சட்டத்தை அல்ல. கண்ணுக்கு கண், காதுக்கு காது உயிருக்கு உயிர் என்ற அல்குர்ஆனின் சட்டத்தைத் தான்! இதன் அர்த்தமென்ன? இந்திய நாட்டு குற்றவியல் சட்டம் தோல்வியை தழுவி விட்டது. அதற்கு பதிலாக குர்ஆன் கூறுகின்ற குற்றவியல் சட்டத்தை அமல் படுத்த வேண்டும் என்பது தான் அதன் அர்த்தமாகும். அச்சத்திற்கு பிறகு அச்சமின்மையை திருக்குர்ஆன் வாக்களிக்கின்றது. (பார்க்க:அல்குர்ஆன்: 24:55) குர்ஆன் சட்டம் அமலாவதற்கு முன்பு அரபகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு போய் அச்சநிலை நிலவியது. குர்ஆன் சட்டம் அமலானதும் அது அப்படியே தலைகீழாக மாறி அச்சமின்மை, அமைதி மக்களிடம் ஏற்பட்டது. வழிப்பறிப் பற்றி நபி (ஸல்) அவர்கள் வினவப்பட்ட போது "ஒட்டகச் சிவிகையில் அமர்ந்திருக்கும் ஒரு பெண் இறையில்லம் கஅபாவை தவாஃப் செய்வதற் காக (வலம் வருவதற்காக)ப் பயணித்து ஹீராவிருந்து வருவாள். அவள் (வழியில்) அல்லாஹ்வைத் தவிர வேறெவருக்கும் அஞ்ச மாட்டாள்" என்று சொன்னார்கள். என்று அவர்கள் பதிலளித்தார்கள். ஹதீஸ் சுருக்கம்: நூல்: புகாரி 3595 அந்த பலனையும் முஸ்லிம் சமுதாயம் இஸ்லாமிய சாமராஜ்யத்தில் கண்டது. குர் ஆன் கூறும் குற்றவியல் சட்டத்தை மக்களுக்கு எடுத்துக் கூறி குர்ஆனின். அற்புதத்தை உணரவைத்தல்

11. வட்டி என்பது வசதி படைத்தவன் வலுப்பெறவும் வசதியில்லாதவன் மீண்டும் மீண்டும் சுரண்டுபடவும் வழிவகுக்கும் ஒரு பொருளாதார வன்கொடுமையாகும். மனிதனின் ரத்தத்தை உறிஞ்சி குடிக்கின்ற வட்டி அடிப்படையிலான பொருளாதாரத்திற்கு எதிராக திருக்குர்ஆன் யுத்த பிரகடனம் செய்கின்றது. தர்மம், பரஸ்பரம் கடன் வழங்கல் மூலம் ஒரு வட்டியில்லா பொருளாதார திட்டத்தை அது மனித சமுதாயத்திற்கு அளிக்கின்றது. அல்குர்ஆன் கூறுகின்ற இந்த வட்டியில்லா பொருளாதார திட்டத்தை மக்களிடம் அறிமுகப்படுத்துதல்

இன்னும் இதுபோன்ற பல்வேறு நல்ல நோக்கங்களுக்காகவும், உயர்ந்த இலட்சியங்களுக்காகவும் நடத்தப்படுகின்ற இம்மாநாட்டிற்குத் தாங்கள் அனைவரும் குடும்பத்துடன் வந்து கலந்துக் கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

*அனைவரையும் குடும்பத்துடன் அன்போடு அழைக்கிறது...*

# தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் (TNTJ)